அன்னவல்லி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு.R.K.சீனுவாசன்

கோப்பு எண். 01/2024 நாள்.06.03.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் – கடலூர் ஊராட்சி ஒன்றியம் – **அன்னவல்லி** ஊராட்சி – **வழிசோதனைப்பாளையம்** கிராமம் – நில அளவை எண்கள் **26/3A,27/5C3,27/6A – 1.02 ஏக்கர்** பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.ரா.மணி த/பெ., ராமு, எண்.28, பங்களா வீதி, பாகூர், புதுச்சேரி என்பவரின் மனைப்பிரிவு அங்கீகாரம் கோரிய மனு . நாள்.27.01.2024.
2. உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககம், கடலூர் அவர்களின் ROC No. RP969XPC/2024/2024/TCP, தேதி.27.02.2024.
3. அன்னவல்லி ஊராட்சி மன்றத் தீர்மான எண்.03/2024, நாள்.06.03.2024.
4. கடலூர் 2ஆம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட தான பத்திர ஆவண எண்.1073/2024, நாள்.29.02.2024.
5. உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககம், கடலூர் அவர்களின் ROC No. RP969XPC/2024/2024/TCP, தேதி.01.03.2024.

>><<>><<

உத்தரவு :–

பார்வை 1ல் காணும் திரு.ரா.மணி என்பவரின் கடிதத்தில் கடலூர் ஊராட்சி ஒன்றியம் , அன்னவல்லி ஊராட்சி, வழிசோதனைப்பாளையம் கிராமம், நில அளவை எண்கள் : 26/3A,27/5C3,27/6A-ல் சம்மந்தப்பட்ட 1.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்க கோரப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககம், கடலூர் அவர்களின் கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் மனுதாரரால் செய்து முடித்த பின்னர் அங்கீகாரம் வழங்குவதற்கு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை பத்திர பதிவின் மூலம் தானமாக பெற்று தெரிவிக்க அறிவுறுத்தி சாலையமைப்பு மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, உத்தேச மனைப்பிரிவில் மனுதாரரால் அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு மனைப்பிரிவு

அமைந்துள்ள பொது இடங்களை ஊராட்சிக்கு தானமாக பெறவும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கவும் பார்வை 3–ல் காணும் ஊராட்சி தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டது.

பார்வை 4ல் காணும் ஊராட்சி ஆவணத்தின்படி பத்திரப் பதிவு நடைப்பெற்று பத்திர ஆவணமும் பெறப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககம், கடலூர் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ.ஊ.உ.இ.(க.மா) எண்.21/2024 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் பொருட்டு ஊராட்சி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அதனை ஊராட்சி தீர்மானம் எண்.03, நாள்.06.03.2024 படி ஏற்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

R.K. Srinivasan

ஊராட்சி மன்றத் தலைவர்
அன்னவல்லி ஊராட்சி

தலைவர்,
அன்னவல்லி ஊராட்சி,
கடலூர் ஒன்றியம்.

பெறுநர் :-

திரு.ரா.மணி
த/பெ, ராமு,
எண்.28, பங்களா வீதி,
பாகூர்,
புதுச்சேரி.

நகல் : உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககம், கடலூர்.

நகல் : இணை சார்பதிவாளர், கடலூர் 2ஆம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், கடலூர்.